**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093896

1. District மாவட்டம் : Madurai | PS: காவல்நிலையம் VKSAC | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 10 | Date: நாள் 22/03/19

2. (i) Act சட்டம்: Cr.PC. | Sections பிரிவுகள்: 102 Cr.PC.
   (ii) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended by PC (Amentment) Act 2018. | Sections பிரிவுகள்: 7 of Prevention of corruption Act 1988 as amented by PC (Amentment) Act 2018.
   (iii) Act சட்டம்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் — | Date to : நாள் வரை 05/01/2019
   Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் 17.45hrs. | Time to : நேரம் வரை 22.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.03.19 | Time : நேரம் 17.00hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20km South west
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address முகவரி Office of the District Manager, TASMAC., Madurai south, SIDCO., Industrial Estate Kappalur, Madurai.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Thirumalai | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Ramakrishnan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் Tahsildhar | (g) Address முகவரி Deputy Inspection cell office, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. K. Amruthan, 54/19, S/o Tr. A. Kumarasamy, District Manager, TASMAC., Madurai south, Kappalur, Madurai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   This case was rigistered after getting instruction from DVAC. and hence no delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheets in page nos 3 to 5 were enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. K. Kumaraguru Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC., Madurai .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Sent by Post.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 22/3/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22/03/2019 at 18.30 hrs.

Name: பெயர் V. Hemalatha
Rank: நிலை ..................No. எண் ........
Inspector of Police,
V&AC., Madurai.

**Submitted,**

கடந்த 05.01.19ம் தேதி நான் (V. ஹேமலதா) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, திரு. ஆர்.திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை அவர்கள் ந.க.எண்: ஐ1/1006/2019, நாள்: 07.01.2019 தேதியின் கீழ் அளித்த புகார் மனுவை மதுரை ஊழல் தடுப்புமற்றும் காண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமமாறு என்னிடம் கொடுத்த மேற்படி புகார் மனுவையும், பணம் ரூ. 53,150/- மற்றும் மதுரை மாவட்டம் கப்பலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தமிழ்நாடு வாணிபக் கழகம் (TASMAC), மதுரை தெற்கு அலுவலகத்தில் பணியாற்றும் மாவட்ட மேலாளர் திரு.அமுதன் என்பவர் ஆஜர் செய்த அலுவலக ஆவணங்களையும் பெற்று பார்வையிட்டது. புகார் மனுவில் உள்ள விபரம் பின் வருமாறு.

அனுப்புனர்: திரு. ஆர். திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்புமற்றும் காண்காணிப்பு பிரிவு, மதுரை ந.க.எண்: ஐ1/1006/2019, நாள்: 07.01.2019 தேதி அய்யா பொருள், திடீர் இணை ஆய்வு 05.01.2019ம் தேதியன்று மதுரை மாவட்டம் கப்பலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தமிழ்நாடு வாணிபக் கழகம் (TASMAC), மதுரை தெற்கு அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் இணை ஆய்வில் கணக்கில் வராத தொகை ரூ 53,150/-ஐ கைப்பற்றப்பட்டது. மதுரை மாவட்டம் கப்பலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தமிழ்நாடு வாணிபக் கழகம் (TASMAC), மதுரை தெற்கு அலுவலகத்தில் பணியாற்றும் மாவட்ட மேலாளர் திரு.அமுதன் என்பவர் மீது மேல் நடவடிக்கை எடக்க வேண்டுதல் - தொடர்பாக பார்வை: திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள்: 05.01.2019.

கடந்த 05.01.209-ம் தேதியன்று கிடைத்த ரகசிய தகவலின் படி மதுரை மாவட்டம் கப்பலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தமிழ்நாடு வாணிபக் கழகம் (TASMAC), மதுரை தெற்கு அலுவலகத்தில் பணியாற்றும் மாவட்ட மேலாளர் திரு.அமுதன் என்பவர், தனது மேற்பார்வையில் பணியாற்றும் ஒயின்ஷாப் மேற்பார்வையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோருக்கான கூட்டம் நடத்துவதாகவும், அப்போது மேற்படி பணியாளர்களிடமிருந்து மாதாந்திர லஞ்சத் தொகை பெறுவதாகவும், மேற்படி அலுவலகத்திலும், அலுவலக கிட்டங்கி வளாகத்திலும் பல்வேறு இடங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளதால், லஞ்சத் தொகையை மறைமுகமாகப் பெற்றுச் செல்வதாகக் கிடைத்த தகவலின் பேரில் மேற்படி கூட்டம் முடித்து அனைவரும் புறப்படும் சமயத்தில் மாலை சுமார் 17.45 மணியளவில் மேற்படி அலுவலக வளாகத்துக்குள் நுழையும் போது எதிரில் இரு சக்கர வாகனத்தில் (TN 58 AY 9642 Hero Honda Splendor) தனது அலுவலகத்திலிருந்து வெளியில் வந்த திரு.அமுதன், மாவட்ட மேலாளர் (தெற்கு) அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு, அவரையும், அவர் இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த கட்டைப்பையையும் எடுத்துக் கொண்டு மீண்டும் அவரது அலுவலகத்திற்கு அழைத்து வந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது திரு.அமுதன் அவர்களையும், அவர் வைத்திருந்த ஜூசப்ஸ் என எழுதப்பட்டிருந்த கட்டைப்பையையும் சோதனையிட்டதில் அதன் உள்ளே இருந்த தேய்க்கப்பட்ட உடைகளுக்குள் இருந்த கருப்பு நிற ஜீன்ஸ் பேண்ட்டிற்குள், 25 மதுக் கடைகளின் எண்களும் அவற்றுக்கு நேரே தொகை மற்றும் பெயர்களும் எழுதப்பட்டிருந்த குறிப்புத் தாளில் ரூ.30,550/- மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.அமுதன் அவர்களிடம் கேட்க, மேற்படி பணம் தனது பைக்குள் எப்படி வந்தது என்ற விவரம் தனக்கு தெரியாது எனக் கூறினார்.

மேலும், மாவட்ட மேலாளர் திரு.அமுதன் அவர்கள் அறையின் நுழைவுவாயில் அருகே வெளிப்புற வடக்கு நோக்கி இருந்த DMO/MDU-S/S-BUREAU - NEW - 2 / 2016 என எழுதப்பட்ட இரும்பு அலமாரியின் பின்புறம் ரூ.1,000/- கீழே கிடந்தது. அந்தப் பணம் குறித்து விசாரித்த போது மேற்படி இரும்பு பீரோ கணக்கு பிரிவு உதவியாளர் திரு.ராஜா என்பவர் பயன்படுத்தும் பீரோ என்றும், அவர் சற்று முன்னர் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும், அந்தப் பணம் எப்படி வந்தது எனத் தெரியவில்லை என்றும் "A" பிரிவு உதவியாளர் திரு.கணேஷ் தெரிவித்தார்.

மேலும், திரு.M.தங்கராஜன், "J" பிரிவு, இளநிலை உதவியாளர் இருக்கையின் பின்புறம் இருந்த இரும்பு அலமாரியின் கீழே ரூ.6,600/- கிடந்தது. மேற்படி பணம் குறித்து திரு.M.தங்கராஜனிடம் கேட்ட போது திடீர் ஆய்வுக் குழு உள்ளே வந்தவுடன் பயந்து சற்று முன்னர்தான் அந்தப் பணத்தை தான் கீழே போட்டதாகக் கூறினார்.

மேலும், அவ்வலுவலகத்தின் உள்ளே இருந்த திரு. திரு.P.லிங்கம், மேற்பார்வையாளர், அரசு மதுபானக் கடை எண் 5515, திருமங்கலம் பஸ் ஸ்டாண்ட், மதுரை மாவட்டம் என்பவரை விசாரித்த போது, ஒவ்வொரு மாதமும் 1 முதல் 10 தேதிக்குள் மாவட்ட மேலாளருக்கு பணம் கொடுப்பது வழக்கம் என்றும், அதன்படி தான் இன்று கூட்டத்துக்கு வந்த போது ரூ.15,000/-ஐ பிரவுன் கலர் கவரில் வைத்துக் கொண்டு வந்திருப்பதாகவும், இன்று கூட்டம் முடிந்தவுடன் திரு.அமுதன் அவர்களிடம் பணம் ரூ.15,000/- கொண்டு வந்ததாகச் சொன்னதாகவும், அவர் உள்ளே கேமரா இருப்பதால் வெளியில் வந்து கொடுக்குமாறு தன்னிடம் சொல்லி விட்டு சற்று முன்னர் அலுவலகத்திலிருந்து சென்றதாகவும், அவர் சென்ற சிறிது நேரம் கழித்து தானும் வெளியில் செல்ல இருந்த போது திடீர் ஆய்வுக் குழுவினர் உள்ளே வந்ததாகவும், அந்தப் பணம்தான் மேற்படி ரூ.15,000/- என்று பணத்தைக் கவருடன் ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.15,000/-த்தை கவருடன் கைப்பற்றப்பட்டது.

திடீர் ஆய்வின் போது, மாவட்ட மேலாளர் (தெற்கு) அலுவலகத்தில் நடைமுறையில் உள்ள பணியாளர்கள் கையிருப்பு பணப் பதிவேடு - 2019 கைப்பற்றப்பட்டது. மேற்படி பதிவேட்டில், அனைத்து அலுவலர்களும் அன்றாடம் அலுவலகத்திற்கு வரும்போது கொண்டு வரும் தங்களது சொந்தப் பணத்தை அலுவலகம் வந்தவுடன் பதிவு செய்ய வேண்டும். ஆனால் மேற்படி பதிவேட்டில் இதுவரை எவ்வித பதிவுகளும் இல்லை. இந்தத் திடீர் ஆய்வின் மேல் விசாரணைக்காக திரு.அமுதன் ஆஜர் செய்த பின்வருபவை கைப்பற்றப்பட்டன.

1. Holiday Turn Duty Register From April 2018 – IMFS Depot, Madurai West Rural.
2. TASMAC LTD., Madurai South, Staff Attendance Register – 2019.
3. TASMAC LTD., Madurai South, CASH REGISTER – 2019.
4. மாவட்ட மேலாளர் அலுவலகம், டாஸ்மாக் லிட்., மதுரை தெற்கு - கலந்தாய்வு கூட்டம் வருகைப் பதிவேடு
5. ஜஸ்ஸப்ஸ் என பிரிண்ட் செய்யப்பட்ட கட்டைப்பை - ஒன்று
6. Zero Made in India – Black Color Paint – 1

மேற்படி திடீர் இணை ஆய்வின் போது, தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் மதுரை தெற்கு மாவட்ட மேலாளர் திரு.அமுதனின் கைப்பையிலிருந்த கருப்பு நிற பேண்ட்டில் இருந்த கணக்கில் வராத பணம் ரூ.35,500/- மற்றும் மேற்படி பணத்துடன் வைக்கப்பட்டிருந்த 25 மதுக் கடைகளின் குறிப்பு எழுதப்பட்ட தாள், அவரது அறையின் முன்பு வெளியில் இருந்த அலமாரியின் கீழே அனாமதேயமாகக் கிடந்த ரூ.1,000/- திரு.லிங்கம் என்பவர் மாவட்ட மேலாளருக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்திருந்த மாதாந்திரத் தொகை ரூ.15,000/-, மேற்படி பணத்தை வைத்திருந்த பிரவுன் நிற கவர் மற்றும் திரு.தங்கராஜ் என்பவரின் இருக்கைக்கு அருகில் கீழே கிடந்த பணம் ரூ.6,600/- குறித்து சரியாக கணக்கு தெரிவிக்காத காரணத்தால் அதனையும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.53,150/-ஐ கைப்பற்றி, அந்தப் பணத்தையும் தொடர்புடைய ஆவணங்களை திடீர் ஆய்வு குறிப்புரை, நாள் 05.01.2019 உடன் இணைத்து உரிய நடவடிக்கை எடுத்திட ஒப்படைக்கிறேன். ஒப்பம் (R.திருமலை) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை (05.01.2019) இணைப்பு 1. இணை ஆய்வு குறிப்புரை, நாள்: 07.01.2019, 2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், 3. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் 4. ரொக்கத்தொகை ரூ. 53,150/- (sd) M. Sathyaseelan 07.01.XIX DSP., V&AC., Madurai. 16.00 hrs. / 22.03.XIX, Inspector Tmt. Hemalatha to register a case on the DIC officer report date 07.01.XIX.- as per the DVAC memo No. SC No. 951/2019/TASMAC/MU dated : 21.02.XIX.- and also the FIR & Connected C.D. files to hand over to Inspector Tr. K.Kumaraguru, V&AC., Madurai for conducting further investigation. (sd) M.Sathyaseelan, 22.03.XIX, DSP., V&AC., Madurai.

Sir, Received report along with documents and registered a case in Madurai V&AC., Crime No. 10/2019 u/s 102 Cr.PC r/w 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 22.03.2019 at 17.00 hrs. (sd) Tmt. V.Hemalatha, Inspector of Police, V&AC., Madurai on 22.03.19.

The original FIR along with the report of the District Inspection Cell Officer dated 07.01.2019 and Joint Surprise Check Proceedings dated 07.01.2019 are submitted to the Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act cases, Madurai and copies were sent to the Officers concerned.

(V.HEMALATHA)
Inspector of Police
V&AC Madurai 22/03/19